# உள்ளாட்சி அமைப்புகளுக்கு சிறப்பு நிதி ரூ.300 கோடி தேவை

## தேசிய வளர்ச்சிக்குழுக் கூட்டத்தில் புதுவை முதல்வர் வலியுறுத்தல்

புதுச்சேரி, டிச. 27: புதுச்சேரி மாநிலத்தின் உள்ளாட்சி அமைப்புகளுக்கான சிறப்பு நிதி ரூ.300 கோடி வழங்க மத்திய அரசு முன் வர வேண்டும் என்று புதுச்சேரி முதல்வர் என்.ரங்கசாமி வலியுறுத்தினார்.

தில்லியில் வியாழக்கிழமை நடைபெற்ற தேசிய வளர்ச்சிக் குழுவின் 57-வது கூட்டத்தில் அவர் பேசியது:

ஜனவரி 1-ம் தேதி முதல் 'உங்கள் பணம் உங்கள் கையில்' எனும் நேரடி பண பரிமாற்றத் திட்டத்தை செயல்படுத்த புதுச்சேரியும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

அனைவருக்கும் வங்கிச் சேவையின் திட்டத்தின் கீழ், புதுச்சேரி மாநிலத்தில் 89 விழுக்காடு குடும்பத்தினர் வங்கிக் கணக்கு வைத்துள்ளனர்.

ஆதார் அடையாள அட்டை பெற 8.99 லட்சம் பேர் பதிவு செய்ததில், 8.12 லட்சம் பேருக்கு அட்டை வழங்கப்பட்டுள்ளது.

புதுச்சேரி யூனியன் பிரதேசம் கடந்த 5 ஆண்டுகளில் சராசரி மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி 12.28 விழுக்காடு அடைந்துள்ளது.

முப்பது , ஆண்டுகளுக்கு முன்பு, 30 விழுக்காடாக இருந்த முதன்மைத் துறைகளின் பங்களிப்பு தற்போது 4.94 விழுக்காடாகவே உள்ளது. இருப்பினும், புதுச்சேரி மாநில வாழ்வியலுக்கு முக்கிய ஆதாரமாக வேளாண்மை விளங்குகிறது.

ராஷ்டிரிய கிரிஷி விகாஸ் யோஜனா திட்டத்தின்கீழ் உள்ள நிதியை பயன்படுத்தி, பல்வேறு பயிர் வகைகளை ஒருங்கிணைந்த பண்ணை முறையின் மூலமும், கால்நடை பராமரிப்பின் மூலமும் மேம்படுத்த ஏற்பாடு செய்யப்படும்.

இத்திட்டத்தின்கீழ், ரூ.33.64 கோடி திட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு, ரூ.11.74 கோடி மட்டுமே இதுவரை வழங்கப்பட்டுள்ளது. திட்டம் பாதிக்கப்படாமல் இருக்க மீதித்தொகையை உடனடியாக வழங்க வேளாண் அமைச்சகத்தைக் கோரியுள்ளோம்.

மத்திய அரசின் திட்டங்களுக்கு நிதி அளிக்கும் போது, பிற மாநிலங்களைப் போலக் கருதாமல், புதுச்சேரிக்கு 100 விழுக்காடு நிதி உதவி அளிக்க வேண்டும்.



கடந்த 2006-07-ம் ஆண்டு முதல் மத்திய அரசின் நிதி உதவி முறையில் கொண்டுவரப்பட்ட மாறுதல்களின் காரணமாக, புதுச்சேரி மாநிலத்தின் திட்டத்துக்கான மத்திய அரசின் நிதி உதவி வெகுவாகக் குறைக்கப்பட்டுள்ளது. இதனால், புதுச்சேரி மாநிலமும் அதற்கு ஈடாகக் கடன் வாங்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

சட்டப்பேரவையுடன் கூடிய யூனியன் பிரதேசமாக புதுச்சேரி இருந்தாலும், மத்திய நிதிக் குழுவின் நிதிப் பங்கீட்டு முறையில் நிதிப்பங்கீடு செய்யப்படுவதில்லை.

இதன் காரணமாக, புதுச்சேரி யூனியன் பிரதேச நிர்வாகத்துக்குக் கடும் நிதி நெருக்கடி ஏற்படுகிறது. இதனால், உள்ளாட்சி அமைப்புகள், கிராம, நகர பஞ்சாயத்துகளுக்கு நிதியைப் பகிர்ந்து அளிக்க முடியவில்லை.

மத்திய நிதி பங்கீடு இல்லாத நிலையில், உள்ளாட்சி அமைப்புகளுக்கு சிறப்பு நிதியாக ரூ.300 கோடி வழங்க வேண்டும்.

மேலும், மத்திய நிதிக்குழுவின் வரம்புக்குள் புதுச்சேரி மாநிலத்தைக் கொண்டுவருவதற்கான சட்டத்திட்டம் செய்யப்படும் வரை, இந்த சிறப்பு நிதி வழங்கப்பட வேண்டும்.

புதுச்சேரி மாநிலத்தில் தொழில் வளர்ச்சி நிலை இறங்குமுகத்தில் இருக்கிறது. கல்விக் கேந்திரமாக இருந்தாலும், தகுதியானோருக்கு வேலை வாய்ப்புகள் இல்லை.

தொழிற்சாலைகளுக்கு மத்திய அரசால் வழங்கப்பட்ட நிதி சலுகைகள் 20 ஆண்டுகளுக்கு முன்பே நிறுத்தப்பட்டதால், பெருவாரியான தொழிற்சாலைகள் புதுவையை விட்டு வெளியேறிவிட்டதே இதற்கு காரணம்.

ஆலைகளைத் தக்கவைக்கவும், பெரிய தொழிற்சாலைகளை கொண்டுவரவும், மத்திய முதலீட்டுக்கான மானியத்தை மீண்டும் அமல்படுத்த வேண்டும்.

புதுச்சேரி மாநிலத்துக்கான வரைவு தொழிற்கொள்கை தயாரிக்கப்பட்டுள்ளது.

இதில், உற்பத்தி, தகவல் தொடர்பு மற்றும் அதைச்சார்ந்த சேவைகள், மரபு சாரா எரிசக்தி, உயிரி-தொழில்நுட்பம் சார்ந்த தொழில்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது.

மேலும், சுற்றுலா மற்றும் அடிப்படை உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த, 12-வது ஐந்தாண்டுத் திட்டத்தில் போதிய நிதியை மத்திய அரசு புதுச்சேரிக்கு வழங்க வேண்டும் என்றார் அவர்.